(ஹுவல் ஹாதீ.)

மனோ ரஞ்ஜிதரின் ஷீஷர் என்று நேர்மையான பெயரில்
லாமல் (அஹ்ஸனுன் னஜாத்) என்னும் கிதாபைப்
பற்றி குறைகூறி வெளியிட்ட நோடீஸ்
விஷயமாக உலகத்தின் அறிவாளர்க
ளுடைய அபிப்பிரா யங்களை
சேகரஞ் செய்து
இதற்கு பெயர்.

# بشارت المومنين مع تنبيه الجاهلين

## பஷாறத்துல் மூமினீன்

(மஅ)

# தன்பீஹுல் ஜாஹிலீன்.

என்று வைத்து
தீனிப்பிறவிகள் சமுகத்தில் துஹ்பாவாக முற்படுத்துவதற்காக
வேண்டி (மேல் விஷாரம்) ஆலீ ஜனாப் வா. மீரு சாகிபவர்க
ளுடையவும். இந்த றிஸாலாவின் துவர்க்கத்தி னடி
யில் கண்டிருக்கும் முஸ்லீம் கனவான்களில்
மூன்று பேர்களுடையவும்
பொருளுதவியின் முயற்சையால்

சென்னை:
பி. ஆர். ராமய்யர் அண்ட் கம்பனி,
அச்சுகூடத்தில் அச்சிடப்பெற்றது.
1914
ஆண்டு துல்கஅதாமீ 5உ

O7:417
N14
125112

# முக்கிய அறிவிப்பு.

இந்த ரிஸாலாவை கைப்பற்றும் முஸ்லிம் பிறவிகளே ! எம தூன் புக்குவந்த இன்பநேசர்களே "தகவலில்லா நோடீஸ் விஷயமாக தீனிப் பிரவிகள் வழிகெட்டுப் போகாமலிருக்க. இந்தனீகருனவேலைக்கி அடியில்குறித்த பத்வாகிதாபையும், இந்த ரிஸாலாவையும் வெளிபடுத்த அறிவாளர்கள். சொல்களால் சவாபைக் கைப்பற்றியது போலும், சீமான்கள் பொருளுதவியால் இதை யச்சிட்டு பலன்களைக் கைப்பற்ற நாடியதுபோலும், தங்கள் தாங்களும் முற்றும்படித்து பார்வையிட்டு மற்றும் முஸ்லிம் பிறவிகளுக்கும் பார்க்கும்படி கொடுத்தாவது, அல்லது படித்து சொல்லி நோடீசுடைய கெடுதிகளை யுரைத்தாவது நேர் வழியைப். பற்றசெய்து அதனுடைய நற்கூலியை ஆகிரத்தில் பற்றவேண்டிய உம்மீதென்னும் ஆசையை வைப்பீர்களாக ஆமீன்.

தகவலில்லா நோடீசுக்கு றத்தாக சங்கைபொருந்திய உலமாக்களால். (குறுஆன், ஹதீஸ்,நான்கு இமாம்களுடையவும்) சொல்களைக் கொண்டு மிக்க அழகானதாயும் போதுமானதாயுமுள்ள விஷயங்களைபேசி அதற்குப்பெயர் (பத்வயே மஜ்மவுல்பறகாத் (விதாயீதி) கிதாபே அஹ்ஸனுன் னஜாத்) என்னும் ரிஸாலா அச்சிட்டு வெளியாய் இருக்கிறது. இந்த பத்வாகிதாபு. முஸ்லிம்பிரவிகள் வசிக்கும் ஊர்களில் அவஸ்யம் இருக்கவேண்டிய தென்பது நோட்டமிடும் இகுவான்களுக்கு நன்குவிளங்கும். விருப்பமுள்ள இகுவான்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு. இரண்டணு போஷ்டு ஸ்டாம்பு அனுப்பினல் ஷி பத்வாகிதாபுடன் இந்தரிஸாலாவும் சேந்த கிதாபு ஒன்றும் புக்போஷ்ட்டில் அனுப்பப்படும். (விலாசம்)

க. முஹம்மது இப்றுஹீம்,
மேல்விஷாரம் போஸ்டு,
நார்த்தார்காடு ஜில்லா.

பிஸ்மில்லா ஹிற்ரஹ்மா நிற்ரஹீம்.

# புஷாறத்துல் மூமினீன்

(மஅ)

# தன்பிஹு ல் ஜாஹிலீன்.

என்னும் றிஸாலாவின் துவக்கம்

ஹந்து வநஅத்துக்குப் பின்னர்.

துனியா ஆகிர மிவ்விரண்டு பதியிலும் ஷங்கையைநாடும் மூமின் முஸ்லீமாகிய இகுவான்களே!

நமது சிறப்பாகிய தீனுடைய ஏவல்கள் பொதிந்துள்ள அஹ்ஸனுன்னஜாத்) என்னுங்கிதாபைப்பற்றி தூஷணையாகபேசி அகஸ்மாத்தாய் தென்ராஜ்ஜியம்முதலிய அநேகராஜ்ஜியங்களுக்கும்வெளிப்பட்ட (போலீவார்த்தைக ளடங்கிய புஸ்தகம்பார்க்கக்கூடாதென்னும்) நோட்டீசைத்தொடர்ந்து அதில் குறிப்பிட்ட சொற்களை நம்பிவழிகெட்டும் வழிகெடவும்நாடும் மூமினாகிய இகுவான்களுக்கு இந்த சுருக்கமான றிஸாலாவில் அநேகம் அத்தாக்ஷிகளைப்பேசியும் அறிவாளர்கள் ஷை நோட்டீசுடைய கெடுதிகளைக்கண்டு அவாம்ஜனங்களுக்கு நல்லறிவுகளையுரைக்க, ஷை தகவலில்லா நோட்டீசை நகல் செய்தும் இதற்குபெயர் புஷாறத்துல்மூமினீன் (மஅத்) தன்பிஹு ல்ஜாஹிலீன் ஏன்றுவைத்து (மேல்விசாரம்) ஆலீஜனுப், வா. மீருசாகிபவர்களுடையவும் (மதரூஸ்) ஆண்டர்சன் தெருவு ஷாப் ஆலீஜனுப் ஆர். ஷேக் அஹ்மது சாகிபு அவர்களுடையவும் ஷை ஆண்டர்சன் தெருவு ஷாப் ஆலீஜனுப் ஆர். பாஜல் அப்துல்கபூர் சாகிபவர்களுடையவும் (மைசூர்) மண்டி ஜனுப் க. முஹம்மது உஸ்மான் சாகிபவர்களுடையவும் பொருளுதவியின் முயற்சியால் அச்சிட்டு

தீனிப்பிறவிக்ள் சமுகத்தில் துஹ்பாவாக இந்த றிசாலாவை வெளிப் படுத்தப் பட்டிருக்கிறது.

## தகவலில்லா நோட்டீசுடைய நகல்.

(அதாவது)

போலீவார்த்தைகளடங்கிய புஸ்தகம் பார்க்கக்கூடாதேன்னும்

# நோட்டீஸ்.

---

நமது கலப்பற்ற இசுலாம் மார்க்கத்தில் முன்னோர்கள் காலத்திலிருந்து நடந்துவரும் நன்னடக்கைகளுக்கு நேர்மாற்றமாக ஓர்புத்தகத்தை தென் இந்தியாவில் திருச்சி, கூடலூர், நாகபட்டணம், மதுரை முதலிய ஜில்லாக் களில் உள்ள அனேக ஊர்களில் முஸ்லிம்கள் கூட்டமாகக்கூடி அதை வாசித்து நம்மார்க்கத்தை பழிப்பவர்களாக நகைத்துப் பாவத்தைப் பற்று கிறார்கள்.

ஆனதால் அத்தகையோர் தம்முன்னோர்கள் நடந்த போக்குகளை கவனிக் கும்பொருட்டு இந்த நோட்டீசில் 5000-ம் போட்டு சகோதரர்கள் வசிக்கும் தலங்களுக்கு என்னுடையவும் என்னுடைய சினேகிதர்களுடையவும் கைமுதல் விரயஞ்செய்து இதை வெளிப்படுத்த முயன்ற சிற்றடிமையின் நல் கருத்தாவது.

### இதைத் தாங்கள் பார்வையிட்டு மற்றும் சகோதரர்களுக்குங் காட்டவேண்டியது.

1-வது அஹ்ஸனுன் னஜாத்தி என்னும் ஓர்புத்தகம் மேல்விசாரத்தா ரால் வெளிப்பட்டிருக்கிறது. அப்புத்தகத்தின் 60-வது சயிட்டுமுதல் 75-வது சயிட்டுவரைக்கும் ஷிற்குகுபிரின் பிரசங்கம் என்று பேசப்பட்டிருக் கின்றன. அதில் நாலிலோர்பாகம் நம்மார்க்கத்துக்கு ஒற்றுமையானதும் மற்றவைகள் முன்னோர்கள் நடக்கைகளிலிருந்து சரிவர நேர்ச்சைகள் நடத் தும் சகோதரர்களை இழிவிலும் இழிவாக ஏசி பேசியும் அவ்லியாக்கள் நாதாக் களை அறவே மறந்துவிடவேண்டியதாய் பேசப்பட்டிருக்கும் போலிவார்த்தை களை நம்பிநடக்கும் சகோதரர்கள் வசிக்கும் ஊர்களில் அவுலியாக்கள் பெரி யோர்கள் துஆபேருண்டாகாதென்று சத்தியமாகத் தெரிந்தவர்கள் மதித்து தப்பிக்கொள்வார்கள், தெரியாதவர்களோ அப்புத்தகத்தின் சொல் நம்பி அவ்லியாக்கள் பெரியோர்கள் துஆபேறை இழந்துவிடுவார்களென்பதற்கு சந்தேகமில்லை.

2-வது ஷை புத்தகத்தில் 88-வது சயிட்டுமுதல் 105-வது சயிட்வேரைக்கும் தொழுகையின் பிரசங்கம் என்று பேசப்பட்டிருக்கிறது. அதில் சிலபல இடங்களில் பேசியுள்ள புரளிவார்த்தைகளை நம்மார்க்கத்துக்கு எதிரிகளான காபிர்கள் நம்மை இலேசாக எண்ணி அவமதிப்புகள்செய்யத்தகுந்த சொல்லுகள் தன்னைத்தான் பழித்துக்கொண்டவாராய் நம்சகோதரர்களை நாமே பழிக்குதல்போல் பேசப்பட்டுள்ள கட்டுக்கதைகளை கவனிக்க நமது மார்க்கமோ காபிரைகாபிரென்பதுக்கு சட்டமில்லை. அப்படியிருக்க காபிரென்றும் மிருகமென்றும் கரோமாகப்பேசியுள்ள அக்கிரமமான வார்த்தைகளை வெளிச்சங்கத்தொழுகையாகத் தொழாமல் உள்சங்கமான அகத்துள் தொழுகையைத்தொழப்பட்டர்களும் 'உண்டென்பதை கவனிக்காதபுரளியை கேள்பார் இல்லாக்காலமாய் விட்டதென்று நம்புவதற்கு ஐயமில்லை:—

3-வது ஷை புத்தகத்தில் கொட்டுமேளத்தைப் பற்றிகடினவிக்கென்று குறிப்பிட்டுள்ள போலீசொல்களை கவனிக்குமிடத்தில் கலியாணம் கத்னு போல் கொத்த சந்தோஷமான விஷயங்களில் கூபாவென்னும் உடுக்குதவிர மற்ற கொட்டடங்கலுமடிப்பதும் குளல் நாகவாசம் முதலியவைகள் வாசிப்பதும் சுன்னத்தாக இருக்குமென்று ஹதீது கிதாபுகளிலும் பிகுஹுகித்தாபுகளிலும் வந்திருக்கும் சொல்களுக்கு நேர்மாற்றமாக இருக்கிறது. இது நேர்மாற்றமென்பதை யறியவிருப்பமுள்ள சகோதரர்கள் காயர்பட்டணம் மகாகனம் அல்லாமத்துல்ஹாமிதுலெப்பை ஆலிம்சாகிபுல்காதிரி அவர்கள் குமாரர் மவுலானுமவ்லவீமுஹம்மது இஸ்மாயீல் ஆலிம்சாகிபவர்களால் ஹிஜ்ரி 1330-ஹு சகுபான்-மீ 27உக்கிச் சரியான 11—8—12-ல் தீர்மானிக்கப்பட்ட இஷ்திஹார்நாமாவை காயர்பட்டணம் அல்மதரஸத்துல் ஹாமிதியா பில்காஹிறத்தில் மிஸ்ரிய்யாவின் சங்கத்தார்களில் மகாகனம் க. வி. அஹ்மதுலப்பை 1. செ. யி. அப்துல்காதர்லெப்பை 2. இவர்கள் வெளிப்படுத்திய தீர்மான நோட்டீஸை கைப்பற்றினவர்களுக்குத்தெரியும். அவர்கள் சந்தோஷமான காரியங்களில் கொட்டுமேளங் குளல்வாசிப்பது ஆகுமென்று நம்பி முன்னோர் நடக்கைகளுக்கும் ஹதீதுபிகுஹுகிதாபுகளுக்கும் மாற்றமில்லாமல் நடந்துவருகிறார்கள். அப்படி இருக்க முஸ்லிம் சகோதரர்களே மேல் குறித்துள்ள தமிழ்புத்தகத்தை பலபாகங்களிலும் சிலமூடர்கள் வைத்துக்கொண்டு அவ்லியாக்கள் பெரியோர்களுக்கு முன்னோர்கள் செய்துவந்த நல் இசயல்களை நிந்தித்தும் இன்னும் கொட்டுமேளங்கூடாதென்றும் வீண்புரளிகள் செய்து கலகம் செய்பவர்கள் தற்போது மிகுதமாய் கலியாணம் கத்னுமுதலிய சந்தோஷங்கொண்டாடும்வீட்டில் அழுதகண் துடைத்தமுகமாய் இருக்கும்போல் செய்ய நாடுகிறார்கள். அந்த வழிகேடரான அறிவீனர்கள் சொல்களையும் மேல்காட்டிய புத்தகச்சொல்களையும் பின்புறம் வீசி இபுலீசுடைய கலைப்பில் சிக்காமல் நீங்கி நன்னெறிகளையும் நம்முன்னோர்கள் நட

வடிக்கைகளையும் நாம் கைவிடாதெடுத்து நடக்கும்பொருட்டு அல்லாஹு—த்த ஆலா எம்மனைவோர்கட்கும் நல்லுதவி புரிவானாக. ஆமீன்.

இங்ஙனம்,

தென் இந்தியாவெங்கும் பிரபல்யமான பெயர்விளங்கும்

மனோரஞ்சிதாமிருத மஹாகனம்

மவுலானாமவுலவீ முஹம்மதுமதீயன் ஆலீம் சாகிபவர்கள்

ஷீஷர்களில் ஒருவரான மவுலானா

☞ மவுலவீ மக்தூமுஹம்மது ஆலிம் சாகிபு

தென் இந்தியாவாசி

ஹிஜாத்து 1332-ம் ஹூ ஜமாதியுஸ்ஸானி மீ 5-ம் தேதி,

கும்பகோணம் வைதீக வர்த்தினி பிரஸ்.

---

## மூமினாகிய இகுவான்களுக்கு எச்சரிக்கை.

---

### கும்மி இராகம்.

ஆதிவல்லானைப் புகழ்ந்து பின்ன ரவன்
அன்பான தூதர் தமைவாழ்த்தி
ஜாதிமுஸ்லிங்கள் தங்களை வேண்டியே
சாற்ற லுற்றேன் கேளு மூமின்களே. (1)

பதிமூன்று நூற்றின்மேல் முப்பத்தி ரண்டாண்டு
பகரும் ஜமாதி யுஸ்ஸானி ஐந்தில்
சதியாக வெளிப்பட்ட நோடீசுக்கு பதில்
சங்கை பத்வா பாரும் மூமின்களே. (2)

கடேசி ஸமானாவாமிக் கலிகாலத்தில்
கடைகெட்ட லஅனத்து வேஷம் மிட்டு
தடைக்கஞ்சா அரவம்போல் வெளியிட்டோர் நோடீசைத்
தாகம்பல் கேடாகும் மூமின்களே. (3)

காலியை விட்டுக் கலங்கிடுங் கன்றுபோல்
கைரான தீனோரை வழிகெடுக்க
போலீவார்த்தை யென்று புல்லறிவார் சொன்ன
பொய் நம்பல் பின்கேடு மூமின்களே. (4)

இல்மாளிகள் அந்த நோடீசைக் கண்டதும்
எடுத்து நெருப்பி லெறிந் திடுவார்
இல்மில்லா மூடர்கள் ஏற்றுக் கொண்டு அதை
இயல்பற்றுப் போகுவார் மூமின்களே. (5)

அல்லா றசூலேவல் கூறும் நூலைக்கண்டு
அன்பொடு தானமல் செய்து வந்தால்
பொல்லா வினைசெயல் நில்லா தகன்றுபோய்
பூரிக்கலாம் நாளை மூமின்களே. (6)

ஆதமின் மக்களாய் நாமுதித்தோ ரிங்கு
ஹக்கை யும்பாத்தி லறிந்து ணர்ந்து
நாதர் நபீமற்றும் நல்லோர் நடக்கையை
நன்குணர வேண்டு மூமின்களே. (7)

அவர்க ளருளையும் நடக்கையும் விபரமாய்
(அஹ்ஸனுன் னஜாத்) நூலிற் கண்டுங்
கவனமுடன் கேட்டுங் கைராமமல் செய்தால்
கடைத் தேறலாம் நாளை மூமின்களே. (8)

சரியான ஷறஉக்கு நேரான சட்டங்கள்
சாற்றல் பொதிந்துள்ள நூல்சிலதை
அறியவே முஸ்லிங்கள் விளம்பரந் தன்னிலே
அவைகள் பெயர் சொன்னோம் மூமின்களே. (9)

அன்பொடு கண்டதை யவ்வலு மாகிரில்
ஆகும் ஷறஹுக்கு நேர்மையதாய்
நன்று அமல்செய்து நல்பதி சுவனிலே
நாளும் வாழநாடும் மூமின்களே. (10)

க. மோகம்மது இப்ராஹீம்

(நோடீசில் குறைகூறிய கித்தாபை நோட்டஞ் செய்த)
அறிவாளர்கள் தமது அபிப்பிராயங்கள்.

தென் இந்தியா முதலிய தேசங்களிலுள்ள அறிவாளர்கள் ஐந்து வாலியம் சேர்ந்த அஹ்ஸனுன்ன ஜாத்தி என்னுங் கிதாபை முடிவுவரையில் கூர்மையாகப் பார்வையிட்டு சந்தோஷ மடைந்து ஷை கிதாபுவிஷயமாக தம்தமது அபிப்பிராயங்களை எழுக்கு எழுதிய வைகளையும், ஷை நோடீசுடைய கெடுதிகளைப்பற்றி அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்தியதையும் நாம் அடியில் எழுதுவதால் இதை பார்த்து இகுவான்களே நேர்வழிகளைக் காட்டும் (அஹஸனுன்ன ஜாத்தி) என்னுங் கிதாபை கைப்பற்றி ஈடேற்றம் பெறும்படியான பாதையைப் பிடித்து இருபதியிலும் நற்பலன்களை யடைவார்களென்று ஹக்சுபுஹானுஹூவத ஆலாவினிடத்தில் ஆதரவு வைத்தனம்:—

---

(1-வது.) நெல்லிகுப்பம். மனூருல் ஹூதா. மதறஸா சங்கத்தாரில் நின்றும் இ. அப்துல் காதர் ஆலிம் சாகிபவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட (குபுரை நீக்கும் ஈமான்துலக்கும்) என்னும் றிஸாலாவில் 7-வது செயிட்டில் (முக்கிய கவனிப்பு) என்று எழுதி இருப்பதாவது.

போலீவார்த்தைகளடங்கிய புஸ்தகம் பார்க்கக்கூடாதென்னும்
**நோட்டீஸ் விஷயம்.**

ஹிஜூரத்து 1332ஹு ஜமாதியுஸ்ஸானிமீ 5வயில் கும்பகோணம் வைதீக வர்த்தினி பிரஸ் என்னும் அச்சியந்திரசாலையில் பதிப்பித்து பிரசுரித்த மேற்படி நோட்டீசானது சுத்தப் பிசகானதாயும் தீனுக்கு அபாயமானதாயுமிருக்குமென்றும் ஆகிர்ஜமானவில் வரப்போகிற தஜ்ஜாலின் முன்னறிவிக்கையாயிருக்குமென்று உறுதியாய் சத்தியமாய் உண்மையென்றறிந்து உஷர்ராயிருப்பதுடன் ஷை நோட்டீசை கண்ட முஸ்லிமாகிய உடற் பிறப்புகள் ஷை. நோட்டீசைக் கிழித்து நெருப்பில் எறித்து தீனுக்கு உதவி செய்த நாதாக்களுடைய கூட்டத்தில் சேர்ந்து அல்லாவுடைய றஹ்மத்தை பெற்றுக் கொள்வீர்களாக.

ஓ முஸ்லீமாகிய உடற் பிறப்புக்களே ஆகிர்ஜமானவில் தீனை வீணாக்கி வீணை தீனாக்கி காட்டும் தஜ்ஜால் வெளியாகுவானென்றும் அதற்கு முன் எச்சரிக்கையாக என் உம்மத்துகளில் இரண்டுவிதமான உலமாக்கள் அதாவது ஆலீமேறப்பானி ஆலீமேஷைய்தானி இவர்களில் ஆலீமேஷைதானி யென்

பவன் தஜ்ஜாலைச் சேர்ந்தவனென்றும் ருபறு ஷிருக்கு ஹறும் பித அத்து என்னும்தீனுக்கு விரோதமான விஷயங்களை தீனின் நல்லகாரியங்களென்று படிப்பில்லாத அவாம்கள் நம்பத்தகுமான கோட்பாடுகள் செய்வார்களென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள் என்பது சிற்றறிவுடையவர்கட்கும் சூரிய பிரகாசத்தைக்காண பிரபல்யமாகத் தெரிந்த விஷயமே ஷெ நோட்டீசானது அந்த தஜ்ஜால் வருவானென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொல்லியபடி கூடிய சமீபத்தில் வெளிப் படுவானென்பதற்கு அத்தாட்சியாய் ஷெ நோட்டீஸ் வெளிப் பட்டிருக்கிற தென்றறிந்து தஜ்ஜால் வருவதை எதிர்பார்த்தவர்களாக இன்று மறுநாள் வரக் கூடுமென்று உள் அச்சங்கொண்டு அல்லாவிடத்தில் காவல்பாடு தேடி ஆலிமே றப்பானியை பின் தொடர்ந்து நடந்து வருவீர்களாக ஆமீன்.

---

2-வது-வாயிஸ். மவுல்வீ-மா-அப்துல்றஜாக்சாகிபு அவர்கள் எழுதிய லட்டர்.

### ஹாமிதன் வமுஸல்லியன் வமுஸல்லிமன்

மேல் விஷாரத்திலிருக்கும் எனதன்புற்ற ஆலீஜனுப் க. முஹம் மது இப்ருஹீம் சாகிபு அவர்களுக்கு தங்களுடைய நன்றியை நாடும் மா. அ. உடைய அஸ்ஸலாமு அலைக்கும் உபய கைரியத்துகளுக்கு தேட்டம்.

நான் சென்ற றஜ்ஜபுமீல் திண்டுக்கல்லில் ஹதீதுகள் சொல் லிக்கொண்டிருக்கும்போது இதே ஹிஜ்ரி 1332-ம் ஆண்டு ஜமாதி யுஸ்ஸானிமீல் தங்களுடைய (அஹ்ஸனுன்ன ஜாத்தி) என்னுங் கிதா கிதாபைப்பற்றி அவதூராக பேசி வெளிப்பட்ட (போலீவார்த்தைக ளடங்கிய புஸ்தகம் பார்க்கக் கூடாதேன்னும்) நோடீஸ் பரவியதை கண்டு இல்மில்லாத ஜனங்களில் மிகுதியாக நோடீசைத் தொடர்ந்து தங்களுடைய ஷெ கிதாபைப் பார்வையிடாமலே அதைக் குறைவாக பேசத் தெடங்கினர்கள்.

அப்போது ஷெ திண்டுக்கல்லில் வாசஞ்செய்யும் மகாகனந் தங்கிய மவுலானா மவுலவீ ஹாபீஸ் அப்துல்கரீம் ஆலீம் சாகிபு 1. மவு லானாமவுலவீ ஹாபிஸ் நைனா முஹம்மது ஆலிம்சாகிபு 2 இன்னும் என் னுடன் அந்த மஜ்லீசில் அநேக முஸ்லிம் பிறவிகளுமாகச் சேர்ந்து அவர்கள் முன்பாக நோடீசில் குறித்து தூஷணையாக பேசியுள்ள

ஷை கிதாபின் செயிட்டுகளைக் கூர்மையாகப் பார்வையிட்டதில் ஷை நோட்டீசானது நமது சங்கையாகிய தீனுடைய காரியங்களில் கலகத்தை யுண்டுசெய்து அவாம் ஜனங்களை வழிகெடுக்கவேண்டிய கருத்தாகவும் ஷை கிதாபில் பேசி இருக்கும் சொல்களாகிறது துனியா ஆகிரத்துக்கு உதவியான நல்மாராயங்களை ஓர் நேர்மையான வழி காட்டுகிறவைகளாகவுங் கண்டு ஷை நோட்டீசை றத்தாகவும் கிதாபில் பேசியுள்ள விஷயங்களை முஸ்லிம்கள் பற்றி அமல் செய்ய தகுமானதாயும் இருப்பதாக அன்று ஷை மஜ்லீசில் பிரசங்கஞ் செய்து தீர்மானிக்கப்பட்டது:—

அதற்குப் பின் ஷை ஐந்து வாலியம் (சேர்ந்த அஹ்ஸனுன் னஜாத்தி) என்னும் கிதாபை துவர்க்கத்திலிருந்து கடைசிவரையில் நான் பார்வையிட்டதில் அதில் பொதிந்துள்ள புதைப்பொருளாயுள்ள அருமையான விஷயங்களைகண்டு அளவிலா சந்தோஷமுங் கொண்டு 1-க்கு 2-3 விடுத்தமாக மடக்கி மடக்கி பார்த்து வருங்காலத்திலொருநாள்.

வாயிஸ் மவுல்வீ நாமக்கல் அஹ்மத் உசேன் சாகிபு என்பவர் தாம் போயிருந்த காரைக்கால், கூடலூர் முதலிய இலாகா ஊர்களில் ஷை நோட்டீஸ் பரவி இருப்பதாகவும் அதைக் கண்ட சிலபல மூடத்தனமுள்ள ஜனங்கள் நோட்டீஸ் வெளியிட்டவரும் ஆலீம் சாகிபு தானே என்று ஷை நோட்டீசில் கண்ட கெடுதிகளை யறியாமல் அதில் குறித்த சொல்களை நம்புவதாகவும், அந்த நோட்டீசில் ஒன்றை கொண்டுவந்து என்னிடம் கொடுத்து அதின் காரணமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது என் கையிலிருந்த ஷை கிதாபிலடங்கிய விஷயங்களைப்பற்றி என்னை கேள்வி கேட்டதும், அவருக்கு நான் பதில்சொல்லியதையும், (நா-அ-கேள்வி) என்றும் அதற்கு (மா-அ-பதில்) என்றும் நாங்கள் தர்க்கஞ்செய்து திட்டமானவைகளை அடியில் குறிப்பிட்டெழுதுவதால். இதை தாங்கள் பரிசோதித்து

அச்சிட்டு பிரசுரஞ்செய்தால் நோட்டீசை கண்டவர்கள் வழிகெட்டுப் போகாமல் நல்அமல் செய்ய முயலுவார்களென்று ஹக்தஆலாவினிடத்தில் ஆதரவு வைத்தனம்.

(அதாவது)




175112

(நா-அ-1-வதுகேள்வி) தங்கள் கையில் பிடித்திருப்பது என்ன கிதாபு.

(மா-அ-பதில்) போலீ வார்த்தைகளென்று தீனுடைய கிதாபை தூஷணித்து நோடீஸ் வெளிப்படுத்தி முஸ்லிம்களை வழி கெடுக்க நாடிய மனோரஞ்ஜிதர் தம் ஷீஷர் குறைகூறிய (அஹ்ஸனுன் னஜாத்) என்னுங் கிதாபு இதுதான்.

(நா-அ-2-வது கேள்வி) ஷை கிதாபை தங்கள் பார்வையிட்டதில் மனோரஞ்ஜிதரின் ஷிஷர் வெளிப்படுத்திய நோடீஸ்படிக்கு குறைகளுண்டோ.

(மா-அ-பதில்) மனோரஞ்ஜிதரின் ஷீஷர் சொற்களை தீனின் அறிவாளர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மூடத்தனமாக காலங் கழிப்பவர்களில் வெறுங்கைய்யா போக வீணாகிய பாவங்களை செய்யும் வேஷங்காட்டிகள் தான் கொண்டாடுவார்கள்.

(நா-அ-3-வது கேள்வி) தீனின் அறிவாளர்கள் ஷை! நோடீசை ஒப்புக் கொள்ளார்களென்றும் வீணாகிய பாவங்களைசெய்யும் வேஷங் காட்டிகள் தான் கொண்டாடுவார்களென்பதற்கு காரணமென்ன.

(மா-அ-பதில்) ஷை கிதாபில் குபிர் ஷிற்கைப் பற்றிய கெடுதிகளையும், தொழுகையை விடுவதில் உள்ள நஷ்டங்களையும், சிறுபாவம் பெரும்பாவமிவைகளைப் பற்றிய இழிவுகளையும், எளிதில் விளங்க விபரமாக பிரித்து பேசி இருப்பவைகளை சங்கையாகிய தீனோர்கள் கண்டவுடன் கண்ணிலொற்றி ஷை விஷயங்களில் தம்மால் குறைகளிருந்தால் அவைகளை விட்டுந் தப்பிக்கொள்ள தக்க உபாயமான தௌபா முதலிய மருந்துகளால் மீண்டு ஜெயம் பெற்றோமென்று ஆனந்தித்து நோடீசை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

மூடர்களான வேஷங்காட்டிகளோ வழிகேடரான முன்னோர் கள்நடந்த போக்குகளை கவனித்து தம்தமது மனம்போன போக்கில் ஷிற்கு குபிர் விளையுந் தீங்குகளையுணராமல் சிறும்பாவம் பெரும்பாவ மடர்வதை யறியாமல் தீனை வீணாக்கி வீணை தீனாக்கி நலம் பொல மறியா பாட்டன் பூட்டன் நடவடிக்கைகளையே சரியென்றும் மனோ ரஞ்ஜிதர்தம் ஷீஷர்கோடீசினும் ஆலீம் சாகிபு பேருடன் தானே வெளிப்படுத்தி இருக்கிறாரென்றுங் கொண்டாடுவார்கள்.

(நா-அ-4-வது கேள்வி) ஷை கிதாபில் தீனோர்களுக்கு நல் மாரா யங்கள் பேசியுள்ளதை யாதும் விபரமாக இருக்கக் கண்டீர்களா.

(மா-அ-பதில்) அதில் பொதிந்துள்ள நல் மாராயங்க ளின்னின் னவைகளென்று தனித்தனியாக குறிப்பிட்டுச் சொல்ல இந்த சுருக் கமான வார்த்தையில் முடியாது ஆகிலும், ஆயிரக்கணக்கான நல் பாக்கியங்களை முகங்காட்டிபோல் அற்புதமான சேதிகளை பேசியும், இன்னு மொருவித தொனியாக சொன்னால் படிப்பவர்கள் கேட்பவர் கள் களைப்பார்களென்று இன்னும்படிப்போ மின்னுங்கேட்போ மென்னும் ஆவல்தரும் தொனியாக சுமார் 36 வித இராகங்களால் சுமார் 6500 பாட்டுகளாகவே சுமார் 600 செயிட்டில் கூறப்பட்டிருக் கிறது.

(நா-அ-5-வது கேள்வி) ஷை ஐந்து வாலியம் சேர்ந்த (அஹ்ஸ னுன் னஜாத்) என்னுங் கிதாபில் பொதிந்துள்ள விஷயங்கள் நமது சங்கையாகிய நான்கு இமாம்களுடைய மதுஹபுகளுக்கும் ஒற்றுமை யானதாக இருக்கின்றதா.

(மா-அ-பதில்) ஷை ஐந்து வாலியம் சேர்ந்த கிதாபு சுமார் 680 பக்கங்கொண்டது. இதில் சுமார் 80 பக்கங்களில் மட்டும் சிற் சில பிக்ஹு மசாயல்களை ஹலறத்து இமாம் அபூஹனீபா றஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்கள் கௌலின் படிக்கி சொல்லியும் மற்றும் 600 பக்கங்களில் பேசப்பட்டவைக ளெல்லாம் ஹனபிய்யாக் கள், ஷாபிய்யாக்கள் முதலிய நான்கு மதுஹபினவர்களுக்கும் ஒற்று மையானதாகவே பேசப்பட்டிருக்கிறது.

(நா-அ-6-வது கேள்வி) பினு இஸ்லாமில் கடமைகளாகிய பற லுகள் ஐந்தைப்பற்றிய விஷயங்களை பேசப்பட்டிருக்கின்றதா.

(மா-அ-பதில்) முஸ்லிங்களில் பாலீகாகிய ஆண்பெண்க ளொவ் வொருவர்களும் அகத்திய மறிந்தமல் செய்யவேண்டி கேள்

வியில் கண்ட விஷயங்க ளேந்தைப் பற்றிய பிக்ஹு மசாயல்களேயும், அவைகளால் இரண்டு பதியிலும் கிடைக்கப்பட்ட நல்மாராயங்களே ஹதீஸ், தலீல், ரிவாயத்து, ஹிக்காயத்து முதலியவைகளுடன் ஷை 5 வாலியத்தில் சேர்ந்திருக்கும். (நஸீஹத்துல் அனும் பீ ஹிதாயத்தில் இஸ்லாம்)என்னும் கிதாபில் அனந்தமனந்தமாகத் தெளிவாகவே பேசப்பட்டிருக்கிறது.

(நா—அ—7—வது கேள்வி) ஆகிரத்துக்கு குதவியாகும் ஓதல்கள், திக்றுகள், தஸ்பீஹ்கள், முதலியவைகளைப்பற்றிய நல்மாராயங்களே ஷை கிதாபில் யாதும் பேசப்பட்டிருக்கிறதா.

(மா—அ—பதில்) ஷை 5-வாலியம் சேர்ந்த கிதாபில் இல்முடைய பிரசங்கம், குருஆனேதும் வரிசைப்பிரசங்கம், சிலசூரத்து ஆயத்துகளின் வரிசைப்பிரசங்கம், கலிமா தெளஹீதுடைய திக்றின்வரிசைப் பிரசங்கமெனும் பாடங்களே அஹ்ஸனுன் னஜாத் என்னும் கிதாபில் 15-வது செயிட்டுமுதல் 59—வது செயிட்டுவரைக்கும் அனந்தமான பதவிகளேத் தரத்தக்கவிபரங்களேயும், இன்னும் அமலால் சிறிதும், சவாபால் பெரியதுமான பவாயிதாக்கள் கிடைக்கப்பட்டவைகளே ஷை வாலியத்தில்சேர்ந்த அஹ்காமுல்ஹிதாயா—பீ—அமாலில் பவாயிதஹ் என்னும் கிதாபில் 51—வது செயிட்டுமுதல் 58—வது செயிட்டுவரைக்கும் அநேக நல்மாராயங்களே விளக்கமாகவே பேசப்பட்டிருக்கின்றது.

(நா—அ—8—வது கேள்வி) தீனேர்களான ஆண்பெண்களில் பெரியோர் சிறியோர் முதலிய யாபேர்களும் தீனிமசலாக்களே மனப்பாடஞ்செய்யத்தக்க விஷயங்களேயாதும் ஷைகிதாபில் பேசி இருக்க கண்டீர்களா.

(மா—அ—பதில்) முஸ்லீமாகிய ஆண்பெண்க ளொவ்வொருவர்களும் தங்கள் தங்கள் பேரில் அகத்தியங்கடமைகளாகிய ஈமான், தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, இவைகளின் பறலு, ஷர்த்து முதலிய பிக்ஹு அகாயிது மசாயல்களேயும், இன்னும் இஸ்லாமுடைய ஹக்கு, தாய்தகப்பனுடைய ஹக்கு, உஸ்தாதுடைய ஹக்கு, புருஷன் பெண்சாதிகளுக் கிடையிலுள்ள ஹக்கு, இவைகளின் விபரங்களேயும், கபீறுவென்னும் பெரும்பாவம், சகீறுவென்னும் சிறுபாவம், குபிர், ஷிற்க்கு, எந்த சொல் எந்தசெயலால் சாபித்தாகிற தென்பதின்விபரங்களே[illegible]ம், குபிர் ஷிற்க்கு சாபித்தானவர்

கள் தௌபாச்செய்து மீளவேண்டிய செய்கைகளின் விபரங்களையும், பெரியோர் சிறியோர் முதலிய யாபேர்களும் எளிதில்விளங்கி மனப்பாடஞ்செய்யவேண்டி இன்னதுஎன்னவென்று ஒருவர் ௬வால் செய்வதுபோலும் அதற்கு மற்றொருவர் பதில்சொல்வது போல் வாசகமாகவே ஷை 5-வாலியத்தில் சேர்ந்துள்ள சுமார் 86-செயிட்டுள்ள தல்கீன் பீ முஹிம்மாதுத்தீன்-லி-அவ்லாதில் முஸ்லிமீன் ஏன்னுங் கிதாபில் விபரமாகவே பேசப்பட்டிருக்கின்றது.

(நா—அ—9-வது கேள்வி) துனியாவைவிட்டு மாகிரத்துக்குப் பிரயாணமாகும் சக்றூத்து முதல்கியாமத்து மீண்டு சுவனம் அல்லது நரகம் சேரும் வரையிலுள்ள விஷயங்களைப்பற்றி ஷை கிதாபில் யாதும் பொதிந்திருக்கின்றதா.

(மா—அ—பதில்) சக்றூத்துடையவருத்தம், இப்லீசுடையகலைப்பு, சக்றூத்துக்கு பின் றூஹூபிரியுமுன் மலக்குகள்வந் தறிவித்தல், மூமின்முஸ்லிம்கள் றூஹூ இலேசாகப்பிரிவது, பாவிகள் றூஹூ கடிசாய்ப்பிரிவது, றூஹூபிரிந்தபின் மையத்தழுது மனைவிமக்கள் முதலிய உற்றூர்களுக்கு உபதேசிப்பது, குளுப்பாட்டையில், கபனிடயில் சந்துக் கெடுக்கையில் மையத்து துயரப்படுவது, மையத்துக்கு கேட்கும்படியாக வான்புவியிலிருந்து சப்தங்கள் வருவது, கபுரிலடக்கியஉடனே மலக்குறூமான்வருவது, அதற்கு பின் முன்கர்நக்கீர் மலக்குள்வந்து கேள்விகேட்பது, நல்லோர்கள் ஆனந்தமடைவது, பாவிகள் பரிதாபப்படுவது, கியாமீநாள் வருவது, மஹ்ஷறுக்குஎழும்புவது, அம்மஹ்ஷர் நாளையில்நேரும் அமளிகள் ஹக்தஆலாஉடையநீதம், ஷபாஅத்துடைய சேதிகள், புல்சிறுத்துடையவாலாறுகள், அதில்கடந்து சுவர்க்கம்நரகம் முதலிய தலங்களுக்கு போகப்பட்ட விஷயங்களைப்பற்றி ஷை 5—வாலியத்தில் சேர்ந்த இரண்டுபாகமுஞ்சேர்ந்த தன்பிஹூல் அனும் பீ துஹ்பத்தில் அவாம் என்னுங் கிதாபில் 172—வது செயிட்டுமுதல் 238—வது செயிட்டுவரைக்கும் மிகத்தெளிவாகவும் விபரமாகவும் பேசப்பட்டிருக்கின்றது.

(நா—அ—10—வது கேள்வி) பெற்றோர்களைவெறுத்து பெண்ஜாதியால்வினையுந் தலகாணிமந்திரமெடுத்து ஆவலுடன் பெற்றுவளர்த்த தாய்தந்தையர்கள் உண்ணஉடுத்தஇல்லா தியங்கியும், தானும் மனைவிமக்கள் ஒழுங்காயுண்டுடுத்தியும் பெற்றோர்களை பேயைப்போலாட்டி

பேநசிப்களாகும் பேதையர்களுக்கு ஷை கிதாபில் யாதும் தகுந்த உபதேச முண்டுமா.

(மா-அ-பதில்) தாய்தந்தையர்கள் மறுங்கைப்பற்றிய விஷயங்களையும், அவர்களைவெறுத்தமக்களின் இடர்களையும், தற்காலத்தில் மூடத்தனமாயுள்ள மக்களுடைய நடவடிக்கைகளின் உதாரணங்களையும், படிப்போர் கேட்போரெவர்களும் இப்படியும் உண்டாவென்று நகைத்து குறைகள் பேசும்போது பெற்றோர்களை வெறுத்த பேதமைத் தனமுள்ள மகன் தலைகவிழ்ந்து கண்திறந்து அன்னை தந்தையர்கள் பேரில் பிரியம் வைத்து நடக்கும்படி மனம் நாடத் தக்க நல்மாராயங்களும் அநேக உபதேசங்களும், பற்பலவித அத்தாக்ஷிணைகளுடன் ஷை 5-வாலியத்தில் இரண்டு பாகமுஞ் சேர்ந்த தன்பிஹுல் அனம்-பீ-துஹ்பத்தில் அவாம் என்னுங்கிதாபில் 73-வது செயிட்டு முதல் 104-வது செயிட்டு வரைக்கும் விபரமாகவுந் தெளிவாகவும் பேசப்பட்டிருக்கின்றது.

(நா-அ-11-வது கேள்வி) ஏழைப் புருஷரை ஏசியும், இடர்கள் பல பேசியும், புருஷன் பணி விடையை போக்கியும், பூலோக வாழ்வை சத மாக்கியும், புருஷனுடைய ஹக்கு தன்பேரில் கடமையாக உள்ளவைகளை யறிந்துணராப் பெண்களுக்கும், இதுபோல் பெண் ஜாதிமார்களுக்கு ஆக தன்பேரில் கடமையாக உள்ள ஹக்குகளை அறிந்துணராத ஆண்கள்.

ஆகிய இத்தகைய புருஷபாரியர் ஒற்றுமையிலோ பாம்புங் கீரியும், பூனையும் எலியும், கல்லுந்தேங்காயும் போலெதிர்த்து சொற்ப வயதை சந்தோஷத்தில் போக்கா அற்ப புத்தியால் ஒற்று வாழாதவர்களுக்கு ஷை கிதாபில் யாதும் உபதேச முண்டுமா.

(மா-அ-பதில்) புருஷபாரியர் விஷயத்தில் போதுமானவரையில் தன்பிஹுல் அனம் முதல் பாகமிரண்டாம் பாகத்தில் 105-வது செயிட்டு முதல் 133-வது செயிட்டு வரையில், நஸீஹத்துல் அனம் பீ ஹிதாயத்தில் இஸ்லாம் முதற்பாக மிரண்டாம் பாகத்தில் 45-வது செயிட்டு முதல் 60-வது செயிட்டு வரையில், அஹ்ஸனுன்ன ஜாத்தில் 107-வது செயிட்டு முதல் 191-வது செயிட்டு வரையில் பேசியுள்ள விஷயங்களை படித்தவர்களும் அல்லது கேட்டவர்களும் ஏழைப் புருஷனாக இருந்தாலு மென் எஜமானே சீமானென்று பாரியர்களும், தன் பெண்ஜாதியால் குறைகண்ட புருஷர் பெண்புத்தி குறைவு

தானே என்று மதித்து மனம்பொறுத்து சீர்திருத்தி சுகமாக இரண்டு பேர்களு மிகபரமிரண்டிலும் நல்பாக்கிய மடைவார்களென் பதற்கு சந்தேகமில்லா நல்லறிவுகளை தெளிவாகவே பேசப்பட்டிருக் கிறது.

(நா-அ-12-வது கேள்வி) மாமி நாத்தி என்னும் பட்டம் பெற்ற பெருமையால் மற்றொரு வீட்டின் பெண்ணைத் தந்து மனம்போன போக்கில் மாடாடு பேரலெண்ணி மருமகளை வதைக்கு மாதர்களுக்கு ஷை கிதாபில் யாதும் உபதேசமுண்டுமோ—

(மா-அ-பதில்) ஷை 5-வாலியத்தின் அஹ்ஸனுன்னஜாத் தென் னுங் கிதாபில் 192-வது செயிட்டில் பேசியுள்ள மாமி நாத்தி பட்டம் பெற்ற மாதர்களுக்கு நல்மாராய மென்னும் விஷயம் முழுதும் படித்த அல்லது கேட்ட மாமி நாத்தியர் மருமகளை தன் சொந்த மகளாக பாவித்து இருபதியிலும் நல்கீர்த்தியுடன் வாழ்வார்களென்பதற்கு சந்தேகமில்லா நல்லறிவுகளை விளக்கமாகவே போதிக்கப்பட்டிருக் கிறது.

(நா-அ-13-வது கேள்வி) பெண் மக்களைப் பெற்றோர் தம் மக ளுக்கு நல் நஸீஹத்துடன் சீர்திருத்தம் செய்து மாப்பிள்ளை வீட் டிற்கு அனுப்பினல் அப்பெண்களிரண்டு வீட்டின் பெயரையும் சிறப் பாக விளக்கி நற்செய்கையில் நடந்து நல்பதியடைவார்களென்னும் பெரியோர்கள் சொற்படிக்கு தாய் தந்தையர்கள் தம் மகளுக்கு ஷை கிதாபில் யாதும் நசீஹத்து நல்மாராயங்களை போதித்திருக்கின்றார் களா.

(மா-அ-பதில்) மகளாருக்கு தாய் நற்புத்திகளை போதிக்கும் நல்லியல்புகளை 5-வாலியத்தின் அஹ்ஸனுன்னஜாத் என்னுங் கிதாபில் 181-வது செயிட்டு முதல் 187-வது செயிட்டு வரைக்கும் மணஞ் சூட்டிய மகள் மாமிவீடு போகையில் மாதா தரும் சீதனவாக்கிய மென் பதில் பேசியுள்ள விஷயங்களை படித்த பெண்கள் அல்லது கேட்ட பெண்கள் இரண்டு பதியிலும் ஜெயம் பெறத்தக்க நல் நடக்கைகளை சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய உபதேசங்களை விளக்கமாகவே பேசப்பட்டிருக்கிறது.

(நா-அ-14-வது கேள்வி) உலக வாழ்க்கையை பற்றியும், சரீர சுகத்தைப் பற்றியும், ஷை கிதாபில் யாதும் பேசப்பட்டிருக்கிறதா.

(மா-அ-பதில்) ஷை கேள்விகளுக்கு தகுமான பாயங்களை அனந்த முதாரணங்களுடன் ஷை 5-வாலியத்தின் அஹ்ஸனுன் னஜாத் தென்னுங்கிதாபில் 192-வது செயிட்டு முதல் 202-வது செயிடுவரைக்கும் பல நன்மாராயப் பிரசங்கத்தில் விபரமாகவே பேசப் பட்டிருக்கிறது.

(நா-அ-15-வது கேள்வி) ஷை 5-வாலியம் சேர்ந்த அஹ்ஸனுன் னஜாத் தென்னுங் கிதாபாகிறது முஸ்லீமாகிய ஆண் பெண்களொவ் வொருவர்களுக்கும் முக்கியம் வேண்டிய கிதாபுகள்தான். ஆகிலும் இது சுத்த தமிழிலிருப்பதால் ஆண்கள் படித்து நயநஷ்டமறிந்து நல் அமலைப்பற்றுவார்கள் என்பதில் பூரணமாகிய நம்பிக்கையாக தெரிகிறது.

ஆண்கள் கையில் சிக்கி மூலையைப் பிடித்துள்ள பெண் பிறவி களுக்கு மிகவுந் தெரிந்த அறபுத்தமிழில் இல்லாமல் சுத்தத்தமிழில் இருப்பதை யவர்கள் எவ்விதம் படித்து நல் அமலைப்பற்றுவார்கள்.

(மா-அ-பதில்) பெண்கள் எளிதில் படித்தறிந் தமல் செய்ய வேண்டி 8-வது கேள்வியில் சுவால் ஜவாபாக கூறப்பட்ட முழுகி தாபையும் அறபுத்தமிழில் டிம்மி 136 பக்கங் கொண்டதாக அச் சிட்டு தனிப்பிரதியாக ஸ்டிப் பயிண்டு செய்தும்,

இன்னும் இஸ்மு, குறுஆன், சில பல சூறத்து, ஆயத்து, கலி மாதெளஹீதுண்டைய திக்று, தஸ்பீஹ் முதலியவைகளை ஓதுவதின் வரிசைகளையும் இன்னுமநேக நல்மாராயங்களை பேசி றுயல் பெரிய சைசில் 60-பக்கங்களுடைய (அறபுத்தமிழ்) அஹ்ஸனுன்னஜாத் தென் னுங் கிதாபு ஒன்றும்,

இன்னும் புருஷபாரியர் ஒத்து வாழவேண்டிய விஷயங்களைப் பற்றி 11-வது கேள்வியில் கூறிய விஷயங்கள் யாவும் சேர்த்து றுயல் பெரிய சைசில் 140-பக்கங்களுடைய (அறபுத்தமிழ்) நஸீஹத்துஸ்ஸவ் ஜைன் என்னுங் கிதாபு ஒன்றும்,

இன்னும் பிக்ஹு மசாயல்களை மனப்பாடஞ் செய்யவும், அம லால் சிறியதும் சவாபால் பெரியதுமான நல் மாராயங்களின் ஓதல் களை பேசி றுயல் பெரிய சைசில் 64-பக்கங்களை யுடைய (அறபுத் தமிழ்) அஹ்காமுல் ஹிதாயா. பீ. அஅ மாலில் பவாயிதஹ் என் னுங் கிதாபு ஒன்றும்,

ஆக மேல் குறித்த மூன்று கிதாபுகளையும் சேர்த்து றுயல் பெரிய சைசில் சுமார் 282 பக்கங்களை யுடைய அறபுத்தமிழ் மூன்று வாலியம் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன் என்னுங்கிதாபில் பெண்

களுக்கு வேண்டிய முக்கியமான நல்மாராயங்களும், உபதேசங் களும், அனந்த மனந்தமான அத்தாக்ஷிகளுடன் விபரமாகவுந் தெளி வாகவும் பேசப்பட்டிருக்கிறது. இதைப் படித்தறிந்துநடக்கும் பெண் களின் புருஷமார்கள் தமது மனைவியர்களால் பெரும்பதவிகளையும், அவர்களின் நல்லொழுங்குகளையும் பற்றி சந்தோஷமடையும் ஆண்க ளுக்கே தெரியும்.

(நா—அ—16—வது கேள்வி) தங்களை நான் மேல் கேட்ட கேள்வி கள் 15-ல் தங்கள் பதில் சொல்லிய விஷயங்கள் எப்போது பூரண மாக விளங்கும்,

(மா—அ—பதில்) ஷை கிதாபுகளை கைபற்றி முழுமையும் பார்க் காமல் ஆங்காங்கு சில பலதை பார்ப்பவர்களுக்கு நான் சொல்லிய பதில் பூரணமாக விளக்கமாகாது. முழுகிதாபையும் பார்வையிடும் பிறவிகளுக்கு தான் ஷை 15 கேள்விகளில் கண்ட விஷயங்கள் தவிர இன்னுமநேக விஷயங்கள் பரிபூரணமாக விளங்கி சரியென்று மதித்து மறுங்கான அமல்களை செய்ய மிக்க ஆனந்தத்துடன் மனது நாடும்.

(நா—அ—17—வது கேள்வி) ஷை சுத்தத் தமிழ் 5—வாலியம் சேர்ந்த அஹ்ஸனுன் னஜாத் தேன்னுங் கிதாபும், அறபுத்தமிழில் மூன்று வாலியம் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன் என்னுங் கிதாபும், எந்த இடத்தில் கைப்பற்றலாம், அவைகளின் ஹதியாவென்ன.

(மா—அ—பதில்) ஷை கேள்வியில் கேட்ட சுத்தத்தமிழ், அற புத்தமிழ் கிதாபுகளில் மொத்தமாக சேர்த்து பயிண்டு கட்டியதானு லும், தனித்தனியாகவானுலும், ஷை கிதாபுகளுக்கு சொந்தக்கார ராகிய நார்த்தார்க்காடு ஜில்லா மேல் விஷாரம் க. முஹம்மது இப்று ஹீம் சாகிபு என்பவரிடம் மேற்படியார் வெளிப்படுத்திய விளம்பரத் தில் கண்டிருக்கும் லீஸ்டுப்படிக்கி நேரிலாவது, வி—பி—மாறலாகவா வது கைப்பற்றிக் கொள்ளலாம்.

தகவலில்லாநோட்டீசின் அபாயத்தை யுணர்ந்தும், நன்மைகளைக் கருதியும், மேல்கண்ட தீனிகிதாபில் பொதிந்துள்ள நல்மாராயங் களைப்பற்றியும், பேசியதில் நாம் நேரம் போக்கியது கைருகவே இருக்கும்.

ஆகையால் ஹக்சுபுஹானுஹூ வதஆலா எல்லா மூமினுன ஆண் பெண்களனைபேர்களுக்கும், தகவலில்லா நோட்டீஸின் தூஷணை ய நம்பாமல் மறை பொருளாகிய இல்முகளை எளிதிலறிய ஆசை

யும் ஹக்கான வார்த்தைகளைத் தொடர்ந்து அமல் செய்ய குவ்வத்தும் தந்தாதரிப்பானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இப்படிக்கு,

வாயிஸ்—மவுல்வீ—மா அப்துல் றஜ்ஜாக் சாகிபு.

---

3—வது உலமாக்களுடையவும்—முஸ்லிம் சகோதரர்களுடையவும் அபிப்பிராயங்கள்.

மேல்—1—2—ல் குறித்து சொல்லும் அத்தாக்ஷிகள் தவிர நோடீஸ் விஷயமாக தூஷணித்து மனஸ்தாபப்பட்டு அஹ்ஸனுன்னஜாத் என்னுங்கிதாபை வர்ணித்து முஸ்லிம் சகோதரர்களால் அநேக லட்டர்கள் எனக்கு வந்திருந்தபோதிலும், அவர்கள் ஆலீம்களாக இல்லாததால். அந்த லட்டர்களை நகல்செய்து அச்சிடப் படவில்லை

இதுபோல் அநேகமநேக மறிவாளர்கள். தீனைகெடுக்க வெளி பட்ட நோடீஸ் விஷயமாக—நேரில் துயரப்பட்டு, தகுந்தபதில் எழுதும்படியாகச் சொல்லிய உலமாக்கள் பெயர்களை எழுத்து மூலமாக ரிக்கார்டு இல்லாமையால் அவைகளை இதில் குறிப்பிடப் படவில்லை

ஆகையால் புத்திமான்களுக்கு மேல் எழுதிய அத்தாக்ஷிகளும் உலமாக்களால். பெற்று அச்சிட்டு வழங்கும். பத்வயே மஜ்மவுல்பறகாத் (விதாயிதி) கிதாபே அஹ்ஸனுன் னஜாத். என்னும் பத்வாவும் போதுமாக இருக்கிறதென்றும் இந்த சிறிய ரிஸாலா விரிவாகுமெனக்கருதி நிறுத்தலாயினம்.

---

நோடீஸ் வெளிபடுத்திய மனோரஞ்ஜிதரின் சீஷரவர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

தகவலில்லாமனோரஞ்ஜிதரின் சிஷீஷரை எனக்கு தெரிவிக்கும் நண்பர்களுக்கு எம்மாலியன்ற இனாமுங்கொடுத்து நன்றி செலுத்துவோமென்று மதறாஸ். சுதேசமித்திரன். மெயில் பேப்பரில் நடந்த மேமீ ல் 1-வாரம் வரையில் பிரசுரித்தும் இதுவரையில் ஷெ யார் தகவலே கிடைக்கவில்லை வீணாக, நோடீசை அச்சிட்ட ஆபீசிலும். தென்ராஜ்ஜியங் களிலும் அவரை சந்தித்துபேச விஜாரித்ததில் ஆள் தகவலே தெரியவில்லை. ஆஹ் அப்ஸோஸ் கைசேதம் (ஆகையால்)

அவாம் ஜனங்களை வழிகெடுக்க முன்வந்து தலையைமறைத்துக் கொண்டிருப்பவர்—இந்த ரிஸாலாவில் குறித்துள்ள அறிவாளர்கள் தமது அபிப்பிராயங்களையும்—(பத்வயே மஜ்மவுல்பறகாத் (ஷிதாயீதி) கிதாபே அஹ்ஸனுன்னஜாத்)என்னுங்கிதாபையும் கூர்மையாக பார்வையிட்டு அவர் தம் மனம்போனபோக்கில் பிதற்றியதில் நேர்ந்தகுற்றத்துக்கு தௌபா செய்து நமது சங்கையாகிய மார்க்கத்தில் மீளவேண்டியதை பிந்திடாமல் முந்திக்கொள்வது அவருடைய ஹக்கில் கடமையாக இருக்கிறதென்பதை அவர் திட்டமாக அறியவேண்டியது:—

ஹக் சுபுஹானுஹு வதஆலா எல்லாமூமினான ஆண் பெண்களனைவோர் களுக்கும். ஹக்கென்றும் பாத்திலென்று மறிய நல்லறிவையும் அமல்கள்செய்து நற்பலன்களைப் பற்ற தௌபீகையும் ஆகிரத்துக்குப் பிரயாணப் படும்போது கலிமாவொடு மூச்சடங்க ஹிதாயத்தையும் தந் தாதரிப்பா னாக ஆமீன்

இப்படிக்கு
க. முஹம்மது இப்ருஹீம்

---

முஸ்லிம் பிறவிகளுக்கு நல்மாராயங்களைக்கூறும் சுத்த தமிழ் அறபுத்தமிழ் நூதன கிதாபுகளின்

## விளம்பரம்.

முஸ்லிம் சகோதரர்களே இந்த பனாவாகும் துனியாவின் சந்தை கடையிலிருந்து பகாவென்னுங் காயமான ஆகிறத்துக் குதவியான சம்பாத்யஞ் செய்யத்தக்க நல்மாராயங்களை முஅத்தபராகிய அறபீ, பார்ஸீ, ஹிந்தீ கிதாபுகளால் மொழிபெயர்த்தும்

இன்னும் சங்கைபொருந்திய உலமா, புஜலாக்களுடைய சொல்களால் சேகரஞ்செய்தும் பிக்ஹு அகாயிது இல்முகளை ஆங்காங்கு தலீல் ஹதீஸ் றிவாயத்துஹிக்காயத்துமுதலியவைகளுடன். அனந்த மனந்தம் நசீஹத்துகள் உதாரணங்க ளுடனே பேசப்பட்டவைகளை முஸ்லீமாகிய ஆண் பெண்பாலர்முதல் யாபேர்களும் எளிதில் படித்தறிந்தமல்செய்யத் தகுந்த நல்லறிவுகளை படிப்போர் கேட்போரெவர்களும் இன்னுஞ் சற்றேபடிப்போம் கேட்போமென்னும் ஆவலை வருத்தும் வண்ணமாக பற்பலவித இராகங்களால் நமது ஹிந்து தேசவாசிகள் பழக்கமாகப் பேசும் சுயபாஷையாகிய சுத்த தமிழிலும், அற்புதத்தமிழிலும் றஹ்மானுதவியால் சீர்வைச் செய்து

மதராஸ். இராயவேலூர், முதலிய ஊர்களில் வசிக்கும் கல்விக்கடல் களாகிய அனந்தம் உலமாக்களால் பரிசோதித்து அச்சிட்டு வெளிப் படுத்திய அடியிற்கூறும் கிதாபுகளில் பேசும் அருமையான விஷயங் களை விபரித்தெழுத இந்த சுருக்க விளம்பர மிடந்தராது. என்னு லும் வர்ணிக்க முடியாது. அப்படி நான் சொல்லவும் தகாது. பிறத்தி ஊர்களின் உலமாக்கள் மேற்படி கிதாபுகளில் பேசப்பட்ட விபரங்களைப் பற்றி சுட்டிக்காட்டும் வாறுபோல் சிலதை இந்த றிஸா லாவின் 9-வது செயிட்டு முதல் 16-வது செயிட்டு வரைக்கும் தர்க்கஞ்செய்த விஷயங்களை பேசப்பட்டிருப்பதில் காண்க விளங்கும்.

## சுத்தத் தமிழ் கிதாபுகளாவன.

1-வது அஹ்ஸனுன் னஜாத் ஆப் பயிண்டு கிதாபு 1 க்கு ரூ. 1—0—0 வி. பி. யில் 1—3—0

2-வது தன்பீஹுல் அனும் பீ துஹ்பத்தில் அவாம் முதல் பாக மிரண்டாம் பாகம் ஆப்பயிண்டு கிதாபு 1 க்கு ரூ. 1—0—0 வி. பி. யில் 1—3—0

3-வது நஸீஹத்துல் அனும் பீ ஹிதாயத்தில் இஸ்லாம் முதற்பாக மிரண்டாம் பாகம் ஆப் பயிண்டு கிதாபு 1 க்கு அணு 0—8—0 வி. பி. யில் 0-10—0

4-வது அஹ்காமுல் ஹிதாயா பீ அஅமாலில் பவாயிதஹ் ஸ்டிப்பைண்டு கிதாபு 1 க்கு அணு 0—4—0 வி. பி. யில் 0—6—0

5-வது தல்கீன் பீ முஹிம்மாதுத்தீன் லி. அவ்லாதில் முஸ்லிமீன். ஸ்டிப்பைண்டு கிதாபு 1 க்கு அணு 0—4—0 வி. பி. யில் 0—6—0

6-வது மேல் 5 பாராக்களிலும் குறித்த கிதாபுகளைந்தும் சேர்த்து உயர்ந்த கலிகோ பயிண்டு செய்த ஐந்து வாலியம் சேர்ந்த அஹ்ஸனுன் னஜாத். என்னுங் கிதாபு 1 க்கு ரூ. 2—8—0 வி. பி. யில் 2-12—0

## அறபுத் தமிழ் கிதாபுக ளாவன.

1-வது அஹ்ஸனுன் னஜாத். ஸ்டிப் பைண்டு கிதாபு 1 க்கு அணு 0—6—0 வி.பி. யில் 0—8—0

நஸீஹத்துஸ் ஸவ்ஜைன் ஸ்டிப் பயிண்டு கிதாபு 1 க்கு ரூ. 1—0—0 வி. பி. யில் 1—2—0

3-வது அஹ்காமுல் ஹிதாயா பீ அஅமாலில் பவாயிதஹ்
ஷ்டிப்பையிண்டு கிதாபு 1 க்கு 0—6—0 வி. பி.யில் 0—8—0

4-வது ஷெ 3 பாராக்களிலும் குறித்த கிதாபுகள் மூன்றும் சேர்த்து ருயல் பெரிய சைஜில் 282 பக்கங்களடங்கியதும் திரமான ஆப்பயிண்டு செய்ததுமான மூன்று வாலியம் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன்
என்னுங் கிதாபு 1 க்கு ரூ. 1—8—0 வி. பி. யில் 1–12—0

5-வது தல்கீன் முஹிம்மாதுத்தீன் வி அவ்லாதில் முஸ்லிமீன்-ஸ்டிப்பயிண்டு கிதாபு 1 க்கு அணு 6. வி. பி.யில் 0—8—0

## முக்கிய கவனிப்பு

தகவலில்லா நோடிசில் தூஷித்து குறைகூறிய அஹ்ஸனுன் னஜாத்தி என்னுங் கிதாபு 1க்கு ரூ 1-0-0 வி. பி. யில் ரூ 1-3-0 ஆக வைத்திருந்த இந்த கிதாபானது வலியோர் எளியோர் முதலிய யாபேர்களும் கைப்பற்றி நல்அமலை பற்றவேண்டி கிரையம்கொஞ்சம் குறைவாக வைக்கும்படியாக எனது முஹிப்புகளிற் சிலர் கேட்டுக் கொண்டமையால் அவரவர்கள் கேட்டவாறு போல் அடியில் குறித்த கிதாபுகள் எனம் மூன்றும் இந்த ஓர் பதிப்பு மட்டில் ஹதியா குறைவாக வைத்திருப்பதால், விருப்பமுள்ள இகுவான்கள் சிலவாகுமுன் பிந்திடாமல் முந்திக்கொள்ள வேண்டிய விபரமாவது—

விளம்பரத்தில் சுத்த தமிழென்று 1வது பாராவிற் கண்ட :—

அஹ்ஸனுன் னஜாத் 1க்கு ரூ. 0—14—0 வி.பி. யில் 1—0—0

மேற்படி கிதாபு 2க்கு ரூ. 1—12—0 வி. பி. சிலவுஇனும்

மேற்படி கிதாபு 4க்கு ரூ. 3—8—0 இனுமாக மேற்படி
கிதாபு 1 ஆக கிதாபுகளொந்துக்கும் வி. பி. சிலவு இனும்

ஐந்து வாலியம் சேர்ந்த அஹ்ஸனுன் னஜாத் 2க்கு
ரூ. 5—0—0 வி. பி. சிலவு இனும்

மேற்படி கிதாபுகள் 4க்கு ரூ. 10—0—0 இனுமாக மேற்படி கிதாபு 1 ஆக கிதாபுகளொந்துக்கும் வி. பி. சிலவு இனும்

விளம்பரத்தின் அறபுத் தமிழில் 4-வது பாராவிற்கண்ட
மூன்று வாலியம் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன்
கிதாபுகள் 2க்கு ரூ. 3—0—0 வி. பி. சிலவு இனும்

ற்படி கிதாபுகள் 4 க்கு ரூ. 6—0—0 இனமாக மேற்
படி கிதாபு 1 ஆக கிதாபுகளைந்துக்கும் வி.பி. சிலவு இனம்

(கவனிப்பு) ஷெ சுத்தத் தமிழ், அல்லது அறபுத் தமிழ் கிதாபு
ல் 2-அல்லது 4-கிதாபு களுக்கு ஆர்டர் செய்பவர்கள் 1-ரூபா
ஸ்ட்டு சிலவுக்கு அனுப்பி இன்ன கிதாபென்று குறித்து தங்கள்
க்கும் ஊருக்குச் சார்ந்த போஸ்ட் பெயருடன் தங்களுடைய
லாசத்தையுந் தெளிவாக எழுதவேண்டும். நாம் கிதாபு அனுப்பும்
பாது ஷெ ரூபா ஒன்றையுங் கழித்து மீதித்தொகைக்கு வி-பி-யில்
னுப்பப்படும்.

விளம்பரத்தில் கண்ட தனிப்பிரதி கிதாபுகளாயினும் முக்கிய
கவனிப்பில் கண்ட மொத்த கிதாபுகளாயினும் விருப்பமுள்ள இரு
வான்கள் நேரிலாவது அல்லது காலணா போஷ்டு கார்டில் ஆடர்செய்
தாவது கைப்பற்ற வேண்டிய விலாசம்,

க. முஹம்மது இப்ருஹீம்,
மேல் விஷாரம் போஸ்டு,
நார்த்தார்காடு ஜில்லா.

---

பிரத்தி ஊர்களில் வசிக்கும் அறிவாளர்களால் முஸ்லிம் பிரவி
களுக்கு முக்கியந் தேள்வையான கிதாபுகளாக அச்சிடப்பட்டு,

## நம்மிடம் தயாருக இருக்கும் கிதாபுகள்.

---

(லறாருல் முஸ்லிமீன் சார்குர்ஸீ) என்கிற (7) கிதாபுகளடங்
கிய இந்த கிதாபு சுமார் 4-5-வருடகாலமாக கையி
ருப்பில்லாமல் இல்லை, இல்லை என்றெழுதிய இந்த
அறிய நூல் இப்போது உயர்ந்த தாளில் பொம்பா
யில் சுத்த பிரதியாகப் அச்சிட்டு சிறந்த கலிகா பயி
ண்டு செய்து வெளிப்பட்டிருக்கும் மேல்படி கிதாபு
1க்கு ரூ. 1—4—0 வி. பி. யில் 1—7—0

(கீமியாயே ஸஆதத்து) இது-ஹலறத்து இமாம் முஹம்மது கஸ்
ஸாலீ றஹ்மத் துல்லாஹிஅலைஹி யவர்கள் கோர்வை செய்த மேற்படி
பெயருள்ள பார்ஸீ கிதாபை தமிழில் நான்கு பாகமாக கோர்வைச்
செய்து நேர்த்தியான கலிகோ பயிண்டு செய்த கிதாபுகளாவன :—

கீமியாயே ஸஆதத்து 1-வது வால்யம்

இதில் மேல்படி கிதாபின் அஸ்கி பாரங்களான நான்கு உன்வான்களும் முந்திய றுகுனு இபாதாத்தும் அடங்கியுள்ள 300 பக்கங்க ளுடைய கிதாபு 1க்கு ரூ. 1—2—0 வி. பி. யில் 1—5

கீமியாயே ஸஆதத்து 2-வது வால்யம்

இது மேற்படி கிதாபின் இரண்டாம் பாகமாகிய றுகுனு முஆம லாத்து 382 பக்கங்களை யுடைய. மேற்படி கிதாபு 1க்கு ரூ. 1—5—0 வி. பி. யில் 1—8—0

கீமியாயே ஸஆதத்து 3-வது வால்யம்

இது மேற்படி கிதாபின் மூன்றும் பாகமாகிய முஹ்லிகாத்து பொதிந்திய 392 பக்கங்க ளுடைய மேற்படி கிதாபு 1க்கு ரூ. 1—8—0 வி. பி. யில் 1-11—0

கீமியாயே ஸஆதத்து 4-வது வால்யம்

இது மேற்படி கிதாபின் நான்காம் பாகமாகிய றுகுனு முஞ்ஜியாத் துடைய வரலாறு பொதிந்துள்ள 448-பக்கங்க ளுடைய மேற்படி கிதாபு 1க்கு ரூ. 1—10—0 வி. பி. யில் 1—14—0

மேற்படி 1-2 வாலியம் சேர்ந்த லெதர் கலிகோபயிண்டு கிதாபு 1க்கு ரூ. 2—7—0 வி. பி. யில் 2—12—0

மேற்படி 3-4 வாலியம் சேர்ந்த லெதர் கலிகோபயிண்டு கிதாபு 1க்கு ரூ. 3—2—0 வி. பி. யில் 3—8—0

துஹ்பத்துல் ஹிந்து—முதற்பாக மிரண்டாம் பாகமும். மேற்படி ஆப்பயிண்டு 1க்கு ரூ. 0—12—0 வி. பி. யில் 0—15—0

மிஹ்றுல் மதாஹிப் ஆப்பயிண்டு 1க்கு அணு 8. வி.பி. யில் அணு 10.

விருப்பமுள்ளவர்கள் பற்றவேண்டிய விலாசம்,

க. முஹம்மது இப்றுஹீம்,
மேல் விஷாரம் போஸ்டு,
நார்த்தார்காடு ஜில்லா.

PRINTED BY P. R. RAMA IYAR AND Co., MADRAS.